அறுவடை

அழுதன்

வேல் வெளியீடு

அறுவடை

வள்ளுவக் கருத்துக்களை மையமாகக் கொண்ட
ஓரங்க நாடகம்

மதிவரைவு

அழுதன்

வேல் வெளியீட்டகம்
67, கிருன்பாஸ் தெரு, கொழும்பு - 14,
இலங்கை.

வேல் வெளியீடு: 1

முதற் பதிப்பு: 15 சனவரி 1976

உரிமை எல்லாம் பதிவு

விலை ரூபா: ~~4.00~~

ARUVADAI

(A drama based on Thiruvalluva thoughts)

Author: Amuthan

Publishers: Vel Publishing House,
67, Grandpass Road,
Colombo - 14,
Sri Lanka.

First Edition: 15 January 1976

Price: Rs. 3.25

வெளியீட்டுரை

வேல்
வெளியீட்டகம்

67, கிருன்பாஸ் தெரு,
கொழும்பு–14,
இலங்கை.
15 – 1 – 76.

இறவாத புகழுடைய புதுநூல்கள் தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும் என்னும் பாரதியின் கனவை நனவாக்க நாமெடுத்த முயற்சியின் விளைவே, இந்நூல் 'அறுவடை'.

இது எமது கன்னி முயற்சி எனச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகின்றோம்.

இந்த நூல் விற்பனையாற் கிடைக்கும் நிகரலாபம் மேலும் நூல்கள் வெளியிடுவதற்கே உபயோகிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு அறியத் தருகின்றோம்.

எனவே,

இலக்கிய இரசிகர்கள்-தமிழ் அன்பர்கள் இந்த நூலுக்குத் தங்குதடையற்ற ஆதரவைத் தந்துதவ வேண்டுமெனப் பணிவன்புடன் வேண்டுகிறோம்.

சீலம் நிறைந்த சிந்தனைகளால் தாம் சமைத்த இந்த நாடகத்தைத் தங்களுக்குப் படைக்க நமக்கு வாய்ப்பளித்த அன்பன் 'அமுதன்' அவர்களுக்கும், அழகுற பதிப்பித்துத் தந்த கொழும்பு, இரஞ்சனா அச்சகத்தாருக்கும், இந்நூலை அழகாக அமைக்க ஆலோசனைகளும், அச்சுப் பிரதிகளைப் ஒப்புநோக்க உதவியும் அளித்த அன்பர் வ. இராசையா அவர்களுக்கும், எமக்கு உந்து சக்தியாகி, ஊக்கமும் உதவியுமளித்த நண்பர்கள் மா. குலமணி, அரியாலை ஆனந்தன் ஆகியவர்களுக்கும் கடமைப்பாடுடையோம்; அவர்கள்அனைவருக்கும் உளம் குழைந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

அணிந்துரை

இந்நூலைப் பற்றி:

த. சண்முகசுந்தரம்

பி. ஏ. (இலங்கை), கல்வி இடிப்புளோமா (இலங்கை) அவர்கள்.

இந்த நூற்றாண்டுத் தொடக்கத்திலே, தெல்லிப்பளைப் பகுதியில் கல்வி, கலாச்சாரத் துறையில் அருங்கோடை நிலவியது. அந்தக் கோடையின் வெப்பத்தைத் தணித்து வேண்டுவோர்க்கு நிழல் கொடுக்க முளைத்தெழுந்தது ஆலமரமொன்று. அந்த ஆலமரம் பாவலர் தெ. அ. துரையப்பாபிள்ளை என்ற பெயரிற் கொம்பு விட்டு, விழுதுவிட்டு, கிளை விட்டுச் செழித்து வளர்ந்தது. அந்த நிழலில் தங்கி புத்துணர்ச்சி பெற்றனர் பலர். அந்த ஆலமரத்தின் நுண்ணிய விதைகளிலிருந்து புதிய மரங்கள் ஈழத்தின் பல பகுதிகளிலும் முளை கொண்டன. அந்த வழியில் முளை கொண்டு வந்தவர், இந்த நூலின் ஆசிரியர் அமுதன் அவர்கள். இவர் அமரர் தெ. அ. துரையப்பாபிள்ளை நிறுவிய மகாஜனக் கல்லூரியிற் கற்கும்போது நன்மாணாக்கராகத் திகழ்ந்தார். ஏட்டுப்படிப்புடன்மட்டும் நில்லாது, பாவலர் துரையப்பாபிள்ளை காட்டிய கலை வழியிற் சென்றார். கற்கும்போது சிறு கதைகள், ஒற்றையங்க நாடகங்கள் என்பவைகளைத் தீட்டினார். மாணவனாக விருக்கும்போது தமிழ்மன்றத்தின் சார்பிலே கையெழுத்து இலக்கிய ஏடு ஒன்றையும் நடத்தினார். சமுதாயத்தில் நிலவுகின்ற அநீதிகளைக் கண்டு இவரின் பிஞ்சு மனம் அந்தக் காலத்தில் கொதித்தது. அநீதியைமட்டும் எதிர்த்துப் போராடினாற் போதாது. நீதியை நிலைநாட்ட வேண்டும் என்ற கோட்பாடு இவரின் பண்பான உள்ளத்தில் உருவாகியது. இதன் பிரதிபலிப்பே இவர் திறம்பட நடத்திவருகின்ற, இலங்கை

அறிவு இயக்கம். வள்ளுவரின் கருத்துக்கள் காலத்தை வென்றவை. அந்தக் கருத்துக்களை ஆயுதமாகக்கொண்டு அநீதியை ஒழிக்கலாம் என்பது அமுதனின் அசையாத நம்பிக்கை.

காற்றடி போலியங்கும் இவர், ஈழத்திற்கெனத் தனித்து வமுடைய இலக்கியப் பாரம்பரியத்தை உருவாக்கி வளர்க்க வேண்டுமென்ற பெரு விருப்புடையவர். இந்த விருப்பம் இவர் பிறந்த மண்ணுகிய குரும்பசிட்டிக் கிராமத்திற்கே இயல்பானது. புதுமை இலக்கியத்திற்கு உறுதுணையாக விருந்து உழைத்த ஈழகேசரிப் பொன்னையா தோன்றியதும் குரும்பசிட்டி என்பது இங்கு நினைவு கூர வேண்டியதொன்று. புதுமை இலக்கியத்தை வளர்த்து நிலைப்படுத்துவதற்கே இலக்கியப் பேரன்பன் அமுதன் தமிழ்க் கதைஞர் வட்டத்தை [தகவம்] நடத்தி வருகிறார். இது நன்கு பாராட்டப்பட வேண்டிய அலுவல். இதனைவிட, இவர் சிறந்த மேடைநடிகர். பல நாடகங்களில் திறம்பட நடித்தும், சில நாடகங்களைத் தாமே தயாரித்து, நெறிப்படுத்தியும் இருக்கிறார்.

சுவர்க்கம் – நரகம் என்பவை வெறும் புராணக் கதைகள் என்பரொருசாரார்; ஆனல், அங்கு நடப்பவற்றைக் கற்பனைத் திறனுடன் படம் பிடித்து மேடைக்குக் கொண்டுவர வேண்டுமென்பது நாடகாசிரியர் அமுதனின் நோக்கம். மக்களின் நல்வாழ்வுக்கு நாடகம் சிறந்த கருவி. சீர்திருத்தக் கருத்துக்களை இந்த நாடகம் மூலம் அவர் படம்பிடித்துக் காட்டுகிறார். சமுதாயத்தில் நிலவுகின்ற போலிக் கொள்கைகள், ஆசாடபூதித்தனங்கள் போன்றவற்றை மிகவும் நுணுக்கமாக இவர் கண்டிக்கிறார். சமூக விரோதிகளின் பிரதிநிதிகளாக இந்த நாடகத்தில் ஆடலழகி கயற்கண்ணி, வஞ்சம் நிறைந்த வைத்திய நிபுணன் வைத்திலிங்கம், ஆசாடபூதி ஆசிரியன் இராமசாமி, மனிதப்புல்லுருவியானவியாபாரி இராசநாயகம் ஆகியோர் இடம் பெறுகின்றனர். இவர்கள் இயமதர்மராசனையே தங்களுடைய சாதுரியங்களால் நிர்ப்பந்தம் செய்யக் கூடியவர்கள் என்பதை நூலாசிரியர்

மிக அழகாகச் சித்தரிக்கின்றார். சமுதாயத்தில் நிலவுகின்ற அநீதியின் பிரதிநிதிகள் இவர்கள்; சமுதாயத்தில் நிலவுகின்ற இருளின் தோற்றம் இவர்கள். நாடகத்தின் முடிவிலே சமுதாயத்திற்கு வேண்டிய விடிவெள்ளியாக-ஒளியாக-வழிகாட்டியாக சால்புடைய வேல்சாமி அமைகிறார். நண்பன் அமுதனின் இலட்சியத்தின் திரட்சியே நாடக நம்பி வேல்சாமி என்று உறுதியாகக் கூறலாம். இவர் தெரிவிக்கின்ற சமூகக் கண்டனங்கள் நாடகத்தைப் பார்ப்பவர்கள், வாசிப்பவர்கள் ஆகியோரின் உள்ளத்தில் அழியாத ஒரு உணர்ச்சியை உருவாக்கும் என்பதில் ஐயமில்லை. முக்கியமாக இவருடைய கருத்துக்கள் இளந்தலைமுறையினருக்கு அரு விருந்தாக அமையும். நாடகப் பெருங் கலைஞன் ஒளவை சண்முகமும் ஒரு முறை, இளந் தலை முறையினரைக் கவரக்கூடிய நாடகங்கள் உருவாக வேண்டுமென்பதை அழுத்தம் திருத்தமாகக் கூறியுள்ளார். ஆபாசமே இளந்தலைமுறையினரைக் கவரக்கூடியது என்ற போலிக் கருத்து நிலவுகின்ற இக்காலத்திலே சீலம் நிறைந்த சிந்தனை விருந்தைத் துணிந்து வழங்குகின்றார், இந்த நாடகாசிரியர் அமுதன். அவர் முயற்சி நற்பலனை அளிப்பதாக. இத்தகைய கலைத் தொண்டை அவர் தொடர்ந்து செய்து புதுச் சமுதாயமொன்றை உருவாக்க அவருடைய பேனை எந்த நாளும் உழைக்கட்டும் என வாழ்த்தி விடைபெறுகின்றேன்.

ஆல்போல் வளம் பெற்று வளரட்டும்
அமுதனின் தமிழ்ப்பணி!

கந்தசாமி கோவிலடி,
மாவிட்டபுரம்,
தெல்லிப்பளை.

தை. சண்முகசுந்தரம்,
10-1-1976.

இந் நூலாசிரியரைப் பற்றி

அளவையூர்க் கவிஞர்

செ. கதிரேசர்பிள்ளை அவர்கள்

வழங்கிய

அணிந்துரை

தெல்லித் திருநகர் திகழும் மகாஜனக்
கல்லூ ரியிலே கலைபயிற் றிடவெனச்
சென்ற அந்நாட் சீர்க்கலைப் பயிற்சியில்
ஒன்றிய மாணவர் தம்முளே ஒருவன்
செந்தமிழ்ச் சுவையிற் செந்தமி ழுணர்விற்
செந்தமிழ்க் கலையிற் சிந்தை கொண்டனனுய்
ஆக்கத் திறனும் அருங்கலை விநோ தமும்
ஊக்கத் துடன்கொளும் உத்தம னாகி
ஆசாற் கடங்கி அவன்வழிப் பயின்று
பேசா தருங்கலை பேணுதல் கண்டனன்
அ முதலிங் கப்பெயர் அமைந்தஅம் மாணவன்
தமிழில் ஆர்வந் தழைத்திடப் பெற்றவன்
அன்னேன் தகவினை அறிந்தேன் ஆதலின்
மன்னும் அவன்திறம் மலர்ச்சி பெற் றிடவென
என்னுல் இயன்றன யானும் புரிந்தனன்
நாடகங் களிலே நடித்திடு தற்கும்
ஏடகங் களிலே எழுதிடு தற்கும்
மேடைப் பேச்சு விரித்திடு தற்கும்
ஓடி ஆடி உழைத்திடு தற்கும்
சந்தர்ப் பம்பல யான்தந்த துண்டு
அந்தச் சிறுவன் ஆமாம் இன்றே
தந்தையாய் இருமகார்த் தந்த ஞான்றிலும்
முந்திய பயிற்சி முதிர்ச்சி பெற்றேங்க
சிறுகதை கட்டுரை சிறந்த நாடகம்
அறிவியற் பேருரை அனைத்தும் நல்கும்

'அமுதன்' என்றே அவனியோர் புகழத்
தமிழ்எழுத் தாளனாய்த் தளிர்த்திடல் காண்கிறேன்
அறிவியக் கமெனும் அருங்கலை நிலையமும்
செறிதமிழ்க் கதைஞர் வட்டமும் என்ற
தமிழ்ப்பெரு நிலைகளைத் தான்துணிந் தமைத்தே
தமிழ்மணம் திசையெலாம் தங்கிடச் செய்கிறான்
இவற்றுடன்,
தன்னுளே எழுந்த கற்பனை சமைத்துச்
சின்னஞ் சிறியவோர் நாடகத் திருநூல்
ஆக்கிஅச் சேற்றி அவனிக் களித்திடும்
ஊக்க முணைப்பினில் உழைத்திடல் காண்கிறேன்
நீருற்றி வளர்த்த நிறைபயன் தருசெடி
பாருளோர் வியக்கப் பயன்தரல் காண்கிறேன்
அரியநா டகந்தரும் அமுதனை யாவரும்
தெரிய வேண்டியான் சிற்சில செய்திகள்
ஈண்டுரைத் திட்டேன் இன்னினி அவன்நூல்
காண்பீர் அவன்திறம் காணுவீர் காண்க.

அளவை வடக்கு,
அளவெட்டி.

செ. கதிரேசர்பிள்ளை.
12 - 1 - 1976

என்னுரை

அமுதன்

மாயெழு ஒழுங்கை,
குரும்பசிட்டி மேற்கு,
தெல்லிப்பளை.
1 – 1 – 1976.

பார்வைக்குப் பகட்டாகத் தோன்றும் பலர் உண்மையிற் பயங்கர உருவத்தினர். அவர்களின் உண்மைத் தோற்றத்தை மறைப்பது வெளி வேஷம். வேஷம் கலையப்படல் வேண்டும்.

வேஷத்தைக் கலையும் வேலை பூனைக்கு மணி கட்டும் வேலை போன்றது. இது பூலோகத்தில் இலகுவாக முடியும் காரியமன்று.

எனவேதான்,

மனிதர்களிற் சிலரை இயமலோகத்திற்கு இழுத்து வந்தேன்; பழவினைப் பயனை 'அறுவடை' செய்ய ஏற்பாடு செய்தேன்.

...ஏன் சிலரை மாத்திரம்? இவர்கள் எப்படி என் கையுட் சிக்கினர்கள்? ஒரு தடவை யோசிக்கிறேன். நியாயமான பதில் எனக்கே கிடைக்கவில்லை. கைக்குள் அகப்பட்ட யாரோ சிலரை இயமலோகத்திற்கு இழுத்து வந்து, இயமதர்மராசனது விசாரணைக்கு ஆளாக்கி, அதன் மூலம் எம்மிற் பலரின் பகல்வேஷத்தை அம்பலப்படுத்தி விட்டேன் என்ற திருப்தியில் ஓரளவு அமைதி அடைகின்றேன்.

'அறுவடை' ஆவதற்கு அகமகிழ்வோடு உதவியவர்களைப் பற்றி ஒரு வார்த்தை.

என்து நாடகத்தைத் தமது கண்ணி வெளியீடாக வெளியிட்டு என்னைப் பெருமைப்படுத்தியவர்கள் கொழும்பு, வேல் வெளியீட்டகத்தார். கேட்டுக்கொண்டபோது மகிழ்ச்சியோடு அழகான அணிந்துரையை எழுதித் தந்துதவியவர்கள் என் ஆசிரியப்பெருந்தகைகளான திருவாளர் த. சண்முகசுந்தரம் B.A. (Cey.), Dip. in Edu. (Cey.) அவர்களும், அளவையூர்க்கவிஞர் செ. கதிரேசர்பிள்ளை அவர்களும் ஆவர். நாடகத்தில் வரும் ஆசிரியர் இராமசாமியின் பாடலை யாத்தளித்தவர் என் நண்பன், க. இராஜமனோகரன் அவர்கள். இவர்கள் அனைவருக்கும் என் நெஞ்சம் நிறைந்த நன்றிகளை உரித்தாக்குகின்றேன்.

வேண்டித் தவமிருந்து, பெற்ற போது பெரிதுவந்து,
''வாழ்வான், வாழவைப்பான் என் மகன்'' என
வாழ்த்துரைத்த

எந்தையே!

என் உடம்பு எல்லாம் உணர்வாய் உள்ளிருந்து எனை
வாழ்வாங்கு வாழ வழிநடத்தும் உங்கள் இனிய நினைவினுக்கு
இச் சிறு, நறு மலர்

சமர்ப்பணம்.

எந்தை: அமரர் சினியர் வேலுப்பிள்ளை அவர்கள்.
பிறந்தவிடம்: குரும்பசிட்டி, தெல்லிப்பழை.
மறைந்த ஆண்டு: 1939.

இந்த நாடகத்தை மேடையேற்ற விரும்புவோர் வேல் வெளியீட்டகத்தாரிடம் எழுத்துருவ அனுமதி பெறல் வேண்டும். சகல உரிமைகளும் வெளியீட்டகத்தாருக்கே உரித்தானவை.

நாடக உறுப்பினர்:

தேவர்கள்

இயமதர்ம ராசன்	—	கூற்றுவன்
சித்திராபுத்திரன்	—	இயமதர்ம ராசனின் கணக்கன்
வாயிற் காவலன்	—	இயமதர்ம ராசனின் பணியாள்

சாமரை வீசும் மங்கையர், இருவர். இயம தூதுவர் இருவர்.

மனிதர்கள்

கயற்கண்ணி	—	நாட்டியக்காரி
வைத்திலிங்கம்	—	வைத்திய நிபுணன்
இராமசாமி	—	ஆசிரியன்
இராசநாயகம்	—	வியாபாரி
வேல்சாமி	—	உழவன்

கதைநிகழ் இடம்:
இயமலோகத்தில், இயமதர்ம ராசனின் விசாரணை மண்டபம்.

அறுவடை

''அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்கே உலகு''

என்ற குறளொலியுடன் திரை அகல்கிறது. திருவள்ளுவப் பெருந்தகையின் திருவுருவப் படத்திற்கு வணக்கம் செலுத்திவிட்டு நாடகாசிரியன் பேசுகிறான்:

''கலா இரசிகர்களே,

ஆன்ற வணக்கம்.

இயமலோகம் – இந்திரலோகம் – பிரமலோகம் – சிவலோகம் - அந்தரலோகம் - வேதாளலோகம் - பாதாளலோகம் – நரகலோகம் – தேவலோகம் - சுவர்க்கலோகம் முதலிய லோகங்கள் யாவும் வைதீகப் படைப்புக்கள். சில உண்மைகளை இலகுவாக உணர்த்த உருவாக்கப்பட்ட கற்பனைகள்.

அந்தப் புராணக் கற்பனைகளை அப்படியே ஏற்பதல்ல. விளாம்பழம் கிடைத்துவிட்டால் உள்ளடக்கத்தை எடுத்துக் கொண்டு கோதை எறிகின்றோம். அதேபோல் அந்தக் கற்பனைகளின் சாரத்தை ஏற்போம்; சக்கையைத் தவிர்ப்போம்.

இங்கேயும் இயமலோகம், நரகலோகம், சுவர்க்கலோகம் என்பன நாடகமாம் பழத்தின் கோதாய் அமைகின்றன. சாறு திருவள்ளுவப் பெருந்தகையின் கருத்துக்கள். கோது போக்கி வள்ளுவக் கொள்கைகளைக் கொள்ளுங்கள் எனத் தயவன்புடன் வேண்டுகின்றேன்.

இதற்கு மேல் நாடக தரிசனத்திற்குத் தடையாக நந்தி போல் நான் நடுவே நின்றுவிட விரும்பவில்லை. வழிவிட்டு விலகுகின்றேன்.

இதோ, இயமலோகத்தில் இயமதர்மராசன் !

இடம்: இயமதர்ம ராசன் விசாரணை மண்டபம்.

நேரம்: மாலை.

மண்டபம் எழில் மிகு ஓவியங்களாலும், சிற்பங்களாலும், கொடிகளாலும், மணம் மிகு மலர்ச் செடிகளாலும் நிறைந்து பொலிவுடனும், அழகுடனும் காட்சியளிக்கிறது. ஊதுவத்தி, சந்தனம், மலர்கள் முதலிய வாசனைப் பொருட்களின் வாசனை எழுந்துகொண்டிருக்கிறது.

இயமதர்ம ராசன் எருமைச் சின்னம் பொறித்த ஆசனத்தில் அமர்ந்திருக்கிறான். இரு அழகிய மங்கைகள் இருபக்கத்திலும் நின்று சாமரை வீசுகின்றனர். அவனுக்கு வலது பக்கத்தில் சித்திராபுத்திரன் ஏட்டுச்சுவடிகளுடன் வீற்றிருக்கிறான். வாயிற்காவலன் கையில் வேல் ஏந்திக் கொண்டு நிற்கிறான்.

(இயமதர்ம ராசன் ஆணை பிறப்பிக்கிறான்.)

இயமதர்ம ராசன்: யாரங்கே!

வாயிற் காவலன்: சுவாமி!

இய: வருபவர்களை ஒவ்வொருவராக விசாரணைக்கு அனுப்பிவை.

வாயி: அப்படியே சுவாமி!

(கிண்கிணி நாதம் – வளையலொலி முன்னே வர ஆடலழகி கயற்கண்ணி வருகிறாள். ஆடலுக்கான ஆடை அணிகளோடு அழகாகக் காணப்படுகிறாள். அலங்காரம் செய்யப்பட்ட முகம் – மை தீட்டிய புருவங்கள் – புன் முறுவல் பூக்கும் செவ்விதழ்கள் அழகுக்கு அழகு செய்கின்றன.)

வணக்கத்துடன் வந்து நிற்கும் கயற்கண்ணியைக் கண்டதும் சித்திராபுத்திரன் தனக்கு முன்னிலையிற் கிடக்கும்

ஏட்டுச்சுவடியை அவிழ்த்து ஏடொன்றைப் பார்த்த வண்ணம் பேச முற்படுகிறான்.

சித்திராபுத்திரன்: இவள் நாட்டியக்காரி. பெயர் கயற்கண்ணி. இவளின் விபரங்கள்... ...

இய: தேவையில்லை, சித்திராபுத்திரரே; இவளை நான் நன்கறிவேன். விபரங்களையோ குற்றப் பத்திரத்தையோ படித்துக்காட்ட வேண்டிய அவசியமில்லை.

(சித்திராபுத்திரன் சிரம் தாழ்த்தி வணக்கம் தெரிவித்து விட்டு அமருகிறான்.)

இய: கயற்கண்ணி, உன்னை நான் வரவேற்கிறேன். வருக!

சாதாரணரைப் பார்த்துப் பார்த்து என் கண்கள் அலுப்பும், சலிப்பும் தட்டிவிட்டன. இயம வேலையே இயம வேதனையாகிவிட்டது. இன்று நீ வந்தது நன்று. நல்ல தொரு நடனம் ஆடு. உ...ம்... எங்கே?

கயற்கண்ணி: அப்படியே சுவாமி!

(கயற்கண்ணி அழகாக ஆடுகிறாள்.)

இய: ஆ... கா...! அற்புதம்!, அற்புதம்! உன் ஆடலோ அருமை! ஊர்வசி நிகர் அழகு நிறை நீ ஆடும்போது பரதக்கலை இரட்டிப்பு அழகு பெறுகிறது. உன்னைப் பாராட்டுகின்றேன். தமிழர் கலையைப் பாராட்டுகிறேன். ஆடற் கலையிற் கைதேர்ந்த உன்னைக் கௌரவிக்கப் போகிறேன். கேள், உன் விருப்பம் எதுவோ?

கய: (ஆச்சரியமாக) உண்மையாகவா சுவாமி!

இய: உண்மையாகவேதான்! உ...ம்... வேண்டியதைக் கேள். நிறைவேற்றுவது எனது பொறுப்பு.

கய: (தயக்கமாக) சுவாமி, என்னை..... பூலோகத்திற்கு.....

இய: பூலோகத்திற்குத் திருப்பி அனுப்பி வைப்பதா?

கய: ஆம், சுவாமி!

இய: அது இனி எப்படி முடியும்? அதைவிட வேறு என்ன வேண்டும்?

கய: சுவர்க்கத்திற்கு...

இய: முடியாதவற்றையல்லவா கேட்கிறாய்?... உனக்குப் புரியவில்லைப் போலும்! நான் என் அதிகாரத்திற்குட் பட்ட ஒன்றையே தர முடியும். முடிந்துவிட்ட வாழ்வை மீட்டுத் தரவோ, மீளாப் பேரின்ப வாழ்வைப் பெற்றுத் தரவோ என்னால் முடியாது. நீ செய்த கன்ம பலனை அனுபவிப்பது நியதி. பழவினைப் பயனை அனுபவிப்பதை என்னால் நிறுத்திவிட முடியாது.

நான் இறைவனால் நியமிக்கப்பட்ட ஓர் அதிகாரி. அவரவர் பாவபுண்ணியங்களுக்கேற்ப, தீர்ப்பு வழங்குவதே எனது கடமை.

கய: இன்னொன்று கேட்கலாமா, சுவாமி?

இய: கேள், தர முடிந்தால் தருகிறேன்.

கய: (மிகத் தயக்கமாகவும், பயமாகவும்) தங்களுக்கு .....துணையாக...

இய: (வெறுப்பாக) என்ன!

கய: தங்களின் இணைபிரியாத் துணையாகலாமா?

இய: (கோபமாக) அட கொடியவளே!

''ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்''

என்பதை அறியாதவளே! நீ இயமலோகத்திலுமா நாடக மாடப் பார்க்கிறாய்? நடத்தை கெட்டவளே! ஊரறிய

இருவருடனும், இரகசியமாகப் பலருடனும் உறவாடியுமா உன் காமம் தீரவில்லை? இயமனுக்கு வேண்டாம் இந்த இழிவு உறவு.

இல்லை, என்னையும் நரகத்திற்கு அழைத்துச் செல்லத் திட்டம் தீட்டுகிறாயோ.....! காமத்தாற் காலன் தர்மத்தைத் தளர விட்டான் எனப் பரமசிவன் அறிந்து கொண்டால், என்னையும் தீர்த்துக்கட்டி விடுவான். கோடானு கோடி ஆன்மாக்களை நரகத்திற்கு அனுப்பிவைத்த இயமனும் இறுதியில் நரகத்திற்கே போய்ச்சேர்ந்தான் என்ற பழிச் சொல்லும் என்னை வந்து சேரும்.

அடி, உனக்கு ஆடற்கலையை அக்கறையோடு கற்பித்த ஆசானின் குடும்பத்திற்கே நீ அள்ளிவைக்கவில்லையா? இதனால் உன்னைக் கட்டிய கணவன், கழுத்திற் கயிற்றைப் போடவில்லையா? உனக்கு இருதயம் இல்லையா? மானம், ரோசம், வெட்கம் இல்லையா?

இன்று பரதக்கலை தமிழரிடையே மீண்டும் தழைத்தெழுகிறது. புனிதமும் பொலிவும் பெற்று வளர்கிறது. உன்னைப் போன்ற நாட்டியக்காரிகளது நாற்றமெடுத்த வாழ்க்கை அந்தக் கலைக்குக் களங்கம் ஏற்படுத்தி விட்டது.

சித்திராபுத்திரரே, இவளைப் பற்றிய பூர்வீக விபரங்களைப் படித்துக் காட்டுவீர்களா?

சித்: (ஏடொன்றைப் புரட்டி வாசிக்கிறான்) இவளின் தந்தை பெயர் பாலசுப்பிரமணியம். அவன் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவன். அவன் ஒரு கடத்தல் மன்னன். இவளின் தாய் பெயர் கலாவல்லி. அவள் மதுரையைச் சேர்ந்தவள்; தேவதாசி. பாலசுப்பிரமணியத்திற்கு கலாவல்லி வைப்பாட்டி. இவர்களுக்குப் பிறந்தவளே கயற்கண்ணி... ..

இய: இவளும் தாயும் கள்ளக் கூடத்தலுக்கும் கைகொடுத்தார்களா?

சித்: ஆம், தேவா!

கய: அவை என் அறியாமையினால் செய்யப்பட்டவை சுவாமி.

இய: அறியாமையிலா!..... பிசாசே! என்ன பிதற்றுகிறாய்? நீ எதுவும் அறியாமற் செய்தவளல்லள். உன்னைப் பற்றி அனைத்தும் சரியாகத் தெரிந்து வைத்திருக்கிறேன். நீ ஆடற்கலையைப் பழக்கிய ஆசானுடன் ஓடும்போது, உனக்குத் தாலி கட்டிய கணவன் இருந்தது தெரியாதா? அடுத்தவருடன் கூடிக் குலாவும்போது ஆசான் இருந்தது தெரியாதா? கோவில்கள், அற நிலையங்கள் முதலியவற்றுக்கு நிதியுதவிக்கு இலவசமாக பரதமாடுவதாய் விளம்பரப்படுத்திவிட்டு, இரகசியமாகப் பெரிய தொகைகளை வாங்கவில்லையா?

தெரிந்து கொள்! தெய்வத்தின் பெயரில் ஏமாற்றிப் பிழைப்போருக்கு மன்னிப்பே இல்லை. அறத்தின் பெயரிற் பிழைப்போருக்கு மன்னிப்பே இல்லை. அரசன் அன்றறுப்பான்; தெய்வம் நின்றறுக்கும்!

சித்: பிரபு, இவள் தனது வருமானத்தையும் முழுமையாக வருமானவரித் திணைக்களத்திற்குக் காட்டியவளல்லள். இவள் விபச்சாரம் செய்ததும் உடல் இச்சைக்காகவே!

இய: ஆம், உடலிச்சைக்காக விபச்சாரம் செய்வது மன்னிக்க முடியாத குற்றம்.

கய: சுவாமி! இந்த அபலைக்குப் பரிசு தருவதாக வாக்களித்துவிட்டு.....

இய: வாக்களித்துவிட்டு, கன்மத்தையே கணக்கிற் கொள்ளாது கண்மூடித்தனமாக நடந்து கொள்வதல்ல.

தெய்வீகக் கலைக்குக் கௌரவம் கொடுக்க எண்ணிப் பரிசு தரவே விரும்பினேன். எனது தருமம் நிரம்பிய மனதையே முதலாக வைத்து என்னையும் முடித்துக் கட்ட முயன்ற உனக்குத் தருகிறேன், இன்னொரு பரிசு!

நான் தரும் பரிசு! நரகம்,

கய: (அதிர்ச்சியாக) சு...வாமி!

இய: உம்... இதற்கு மேலும் இங்கே நிற்காதே! பாதை அதோ! போ, போய்விடு!

கய: (விம்மி அழுதவாறு) சு...வா...மி...!

இய: (உரத்த குரலில்) இன்னும் நிற்காதே, போ! போய் விடு!

(கரிய உடையணிந்த இரு இயமதூதுவர் வந்து கயற்கண்ணியை அதட்டி, விரட்டிச் செல்கின்றனர். கயற்கண்ணி ''சுவாமி, சுவாமி'' என அழுதவாறு செல்கிறாள்.)

இய: (கை தட்டி) காவலா, அடுத்தவர் யார்? வரட்டும்!

(வைத்திய நிபுணன் வைத்திலிங்கம் M. B. B. S. (Cey.) M. D., F. R. C. S. (Lon.) வருகிறான். மொட் கண்ணுடியுடனும், ரையுடனும், பெல்பொட்டம் காற்சட்டையுடனும் கவர்ச்சிகரமாகக் காட்சியளிக்கிறான்.)

வைத்திலிங்கம்: Good evening your Honour.

(சித்திரா புத்திரன் ஏட்டுச் சுவடியைப் புரட்டியவண்ணம் எழும்புகிறான்)

இய: சித்திராபுத்திரரே, இவன் வைத்திய நிபுணன் வைத்திலிங்கம்தானே!

சித்: ஆம், தேவா!

இய: இவனைப் பற்றிச் சிறிதறிவேன். உங்கள் உதவி தேவைப்படும்போது கேட்கிறேன். நீங்கள் அமரலாம்.

(சித்திராபுத்திரன் தோளின் மேலிருந்த சால்வையை உயர்த்தி மரியாதை செய்து விட்டு அமருகிறான்.)

இய: வைத்திய நிபுணனே, வணக்கம்.

வாசலில் காத்து நிற்க வைத்து விட்டேனே! அப்படித்தானென்றால் அதைத் தவிர்க்க முடியாது இங்கே. ஆளைப் பார்த்து அலுவல் ஆற்றுவோரல்ல, நாம். வருபவர் யாராகவிருந்தாலும் வரும் ஒழுங்கின்படியே வைத்தியத்திற்கு ஆளாக்கப்படுவர். தொழிலைக் கொண்டு பெரியவர் சிறியவர் எனப்பிரிக்கும் பேதைமை இங்கில்லை. வருமான அளவை வைத்து மதிப்பீடு செய்யும் மடமை இங்கில்லை. புறத் தோற்றத்தைக் கொண்டு பெருமகன் கீழ்மகன் எனக் கணக்கிடும் கீழ்மை இங்கில்லை.

நேரே விடயத்திற்கு வருவோம். நீ ஆற்றிய பாவ புண்ணியத்திற்கமையத் தண்டனை வழங்க முன், நீ சொல்ல விரும்புவது ஏதாவதுண்டா?

வைத்: Yes my Lord. I am a man of medicine. I have done selfless service to the sick, especially to the poor section of the masses.

Therefore my Lord, forgive me if I have ever done anything wicked.

May I humbly request you to be merciful, and help this poor soul to achieve heavenly bliss.

இய: அட பாவமே! நீ தமிழனாகவிருந்தும் ஆங்கிலத்திலல்லவா பேசுகிறாய்?

வைத்: You must excuse me my Lord. I hail from an English speaking family and I had my professional education in London.

இய: உந்தக் கயிற்றை இங்கே விடாதே! சித்திரா புத்திரரே, இவனைப் பற்றிய தகவல்களைப் படிப்பீர்களா?

சித்: (ஏட்டுச் சுவடியைப் புரட்டி வாசிக்கிறான்) இவனின் தந்தை பெயர் கந்தையா. சுருட்டு வியாபாரத்தைத் தொழிலாகக் கொண்டவன். வியாபாரம் முன்னேற்றம் கண்டதால், வசதிக்காக பிறந்த இடமாகிய யாழ்ப்பாணத்தை விட்டு கறுவாக்காட்டிற் குடியேறினான். மகனை வைத்திலிங்கத்தை இங்கிலாந்து அனுப்பி வைத்திய நிபுணனாக்கினான். வைத்திலிங்கம் இங்கிலாந்தில் இருக்கும்போது உடலிச்சைக்கு அடிமையாகி, உடல் தொடர்பு வைத்திருந்த மேரி என்ற ஆங்கிலேயப் பெண்ணைக் காதலி என்ற பெயருடன் இங்கே அழைத்து வந்தான்.....

இய: இவனுக்குத் தமிழில் பேசத் தெரியும்தானே!

சித்: பேச மட்டுமல்ல சுவாமி, தமிழில் எழுதவும், படிக்கவும் இவனால் முடியும். இவன் ஆங்கிலேயன்போற் காட்டுவது வெறும் நடிப்பு. இதை நாகரீகம் என நினைந்து தனது தாய் மொழியைச் சிதைத்துப் பேசுகிறான்.

இய: போதும் சித்திராபுத்திரரே, நீங்கள் அமரலாம்.

(சித்திராபுத்திரன் அமருகிறான்.)

இய: வைத்திலிங்கம், நீ சித்திராபுத்திரர் கூறியவற்றை மறுக்கிறாயா?

வைத்: (தயக்கத்தோடு) இல்லைத் தேவா! என்னை மன்னியுங்கள். எனக்கு ஆங்கிலம் பேசித்தான் அதிக பழக்கம் I am more conversant in English.

இய: (கோபமாக) பிறகும் ஆங்கிலமல்லவா பேசுகிறாய்? போலியே, பொய் அளக்காதே! நீ ஆங்கிலம் பேசினால் கௌரவம் என நினைக்கிறாய். அந்தஸ்தின் அறிகுறியென

நினைக்கிறாய். ஆங்கில ஆடை அணிகள், பழக்க வழக்கங்கள் நாகரீகம் என நினைக்கிறாய். உன்னை நீ அவமதிப்பதை - உன் மொழியை நீ அவமதிப்பதை -உன் இனத்தை நீ அவமதிப்பதை - உன் கலாச்சாரத்தை நீ அவமதிப்பதை ஏன் நீ உணர மறுக்கிறாய்?

நீ உணரவே மாட்டாய். நீ பொய்த் தோற்றம் காட்டிப் பெரியவன் என வாழ்பவன்.

உன்னைப் போன்றோரைப் பூலோகம் மதிக்கும்; தேவலோகம் ஒரு போதும் மதிக்காது. மின்னுவதெல்லாம் பொன்னல்ல என்பதை நாம் நன்கறிவோம்.

வைத்: தேவா! நான் போலிக் கௌரவத்தை நாடிய மையை மன்னியுங்கள்.

இய: வைத்திலிங்கம், அப்படி வா, வழிக்கு, இனி என்னுடன் தமிழிற் பேசுகிறாயா?

வைத்: ஆம், தேவா!

இய: நன்று வைத்திலிங்கம்!... சித்திராபுத்திரரே, இவனின் குற்றப்பட்டியலை வாசியுங்கள்.

சித்: (ஏட்டுச் சுவடியைப் புரட்டி வாசிக்கிறான்.)

கந்தையா வைத்திலிங்கம்:

1. போலிக் கௌரவத்தைத் தேடியமை.
2. பொய் வைத்தியச் சான்றிதழ் வழங்கியமை.
3. ஏழை நோயாளரை அசட்டை செய்தமை.
4. இலஞ்சம் வாங்கியமை.
5. பணக்கார நோயாளருக்குச் சலுகை செய்தமை.
6. நோயாளரை, பணம் அறவிடும் தனியார் மருத்துவ மனைகளில் வந்து காணச் செய்தமை.
7. மருந்து மோசடிகளுக்கு உதவியமை.

8. நீதியைப் புறக்கணித்தமை.

9. அநீதியை ஆதரித்தமை.

10. பெண் வைத்திய உதவியாளரின் கற்புக்குக் களங்கம் விளைவித்தமை.

11. இறைவனை நிந்தித்தமை

12. நாத்திகம் பேசியமை.

இய: வைத்திலிங்கம், நீ சுற்றச் சாட்டுக்களை மறுக்கிறாயா?

(வைத்திய நிபுணன் வைத்திலிங்கம் ரையைப் பிசைந்து கொண்டு மௌனம் சாதிக்கிறான்.)

இய: அமைதி ஒப்புதலையே உணர்த்துகிறது.

இன்னொன்று கேட்க விரும்புகிறேன். நீ ஒரு தொழிற்சங்கவாதி, அல்லவா?

வைத்: ஆம், தேவா!

இய: நீ உங்கள் சங்கத்தை நிறுவிய நோக்கமென்ன?

வைத்: மருத்துவத் தொழிலாளரின் நலன் பேணல், தேவா!

இய: ஆனால், நீ செய்ததென்ன?

வைத்: அப்படியொரு தவறும் செய்யவில்லையே, தேவா!

இய: என்ன சொன்னாய்? தொழிற் சங்கச் செல்வாக்கை உபயோகித்துச் சட்டத்திற்கும், ஒழுங்குக்கும் மாறாக உன் னிச்சைப்படி நடக்கவில்லையா? வேலை மாற்றமேயின்றி கொழும்பிலேயே வசதியாகக் காலத்தை ஓட்டவில்லையா? சொந்தக் காரியங்களை நிறைவேற்றவில்லையா?

நீ உனக்குப் பிடித்தவரைக் கொழும்புக்கு வேலை மாற்றுவிப்பதும், பிடியாதவரைக் கஷ்டப் பிரதேசங்களுக்கு அனுப்பி வைப்பது மெதனால்?

இவற்றுக்காகத்தான் தொழிற் சங்கமோ! இதுதான் மருத்துவத் தொழிலாளர் நலன் பேணும் இலட்சணமோ!

நீ செய்தவை அநீதி என்பதை ஒத்துக்கொள்ளுகிறாயா?

வைத்: ஒத்துக்கொள்ளுகிறேன், தேவா! என்னை மன்னியுங்கள்.

இய: என்ன! மன்னிப்பா? இந்த நிலையிலா? நடக்கக் கூடியதல்ல. வாழும்போதே பாவங்களைத் தவிர்த்திருக்க வேண்டும். அறத்தின் அடிப்படையில் வாழ்வை அமைத்திருக்க வேண்டும். அதனை விடுத்து, மறத்தின் வழிச் சென்றாய்.

> ''கெடுவல்யான் என்பது அறிக தன் நெஞ்சம்
> நடுஒரீஇ அல்ல செயின்''

என்னும் உண்மையை உணர்ந்திருக்க வேண்டும். எதுவும் செய்யலாம் – எப்படியும் வாழலாம் என வரையறையின்றி வாழ்ந்துவிட்டு, வாழ்வு முடிந்த நிலையில் மனம் நொந்து – உளம் வெந்து பயனில்லை.

வைத்தியத் தொழிலின் உயர்ந்த இலட்சியங்களை உதாசீனம் செய்துவிட்டுக் கயவனாக வாழவில்லையா?

வைத்: தவறுதான் தேவா! என்னை மன்னித்து மறுவாழ்வுக்கு இடமளியுங்கள். என் வைத்தியப் படிப்பால் மக்கள் பயன்பெறும் வண்ணம் வாழ்வைத் திருத்தி நான் அமைக்கிறேன்.

இய; உன்னால் முடியாது அது.

> ''கற்க கசடறக் கற்பவை கற்றபின்
> நிற்க அதற்குத் தக.''

என்னும் திருக்குறளின் கருத்தை அறியாதவன் நீ. உனக்குப் படிப்பைப் பாவித்துக் கறுப்புப் பணத்தைத் தேடத் தான் தெரியும். அந்தப் பணத்தை உபயோகித்துப் போலி வாழ்க்கை வாழத்தான் தெரியும்.

நீ, படித்தவன் என்ற இறுமாப்பில்—பணக்காரன் என்ற திமிரில் இறைவனையே நிந்தித்திருக்கிறாய். நாத்திகவாதம் பேசியிருக்கிறாய்

''கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்''

என்பது வள்ளுவர் வாய்மொழி. நீயோ ''There is no God. God conception is the result of subjective thinking'' என ஆணவத்துடன் விதண்டாவாதம் செய்தாய்.

உன்னை எப்படி மன்னிப்பது? உனக்கு மன்னிப்பே இல்லை. உனக்கு நரகம்தான் அறுதி. ஆனால், நீ ஆற்றிய தொழிலின் தெய்வீகத்தன்மையைக் கருத்திற் கொண்டு உன்னைச் சாதாரண நரகத்திற்கு அனுப்பிவைக்கிறேன். போ! .. போய்விடு!...

(வைத்திய நிபுணன் வைத்திலிங்கம் சற்றுத் தயங்க, உரத்தகுரலில்,)

போ..... போ ... போய்விடு!

(இயமதூதுவர் இருவர் வந்து வைத்திய நிபுணன் வைத்திலிங்கத்தை இழுத்துச் செல்கின்றனர். வைத்திலிங்கம் கறுத்த முகத்தோடு, தலை கவிழ்ந்தவாறு போகிறான்.)

இய: காவலனே, அடுத்தவர் வரட்டும்!

(தேசிய உடை அணிந்த தமிழ் ஆசிரியன் இராமசாமி வருகிறான். ஒற்றைக் கையிற் குடையும், மற்றக் கையிற் சில புத்தகங்களும் காணப்படுகின்றன. வரும்போதே நற்

றமிழ்க் கவிதை பாடி இயமதர்ம ராசனை நயம்பட வாழ்த்துகிறான்.)

இராமசாமி: கத்துங்கடல் முத்தின் நிரைபதி
எத்திக்கிலும் வைரத் தூணிறை
சித்(தி)ரச்சுவர் தன்னே டிலங்கிடும் மன்றத்தில்

கந்தப்புகை கம்மென் றெழுந்திட
அந்திக்கம லங்க ளிரண்டுடை
வஞ்சிக்கொடி யன்னார் சாமரை வீசிடவே

எத்திக்கிலே யெது நடப்பினும்
அந்தப்படி யது குறித்திடும்
சித்ரபுத்ர னென்பா னொருபுற மிருக்கவே

திக்கெட்டினுந் திகழ் புரவலர்
திக்கொன்றிலா திழி வேழையர்
எந்தக்குண மெது கொண்டவ ராலுலும்

எத்தன்மைய ரெது செய்தவர்
என்றிப்படி யறிந் தென்றுமே
தக்காங்கருள் செய் திலங்குதர்ம ராஜனே

தர்மந்தா னுன் னுருவமே
தக்காரு ளெல்லாந் தலைவனே
தளராத செங் கோலுடைச் சான்றோனே

எத்தன்மையி னுனைப் பாடுவேன்
என்றிப்படி நின் றேங்கிடும்
என்றனிலைக் கருள் செய்குவாய் காலனே

உன்றன்புகழ் என்றும் வாழ்கவே
உன்றன்அருள் எங்கும் சிறக்கவே
என்றும்அருள் புரிவீர யம ராஜனே

(சித்திராபுத்திரன் ஏட்டுச் சுவடியையெடுத்து, கட்டை யவிழ்த்த வண்ணம் எழுந்து, பேச எத்தனிக்கிறான்.)

இய: (கையமர்த்தி) வேண்டாம் சித்திராபுத்திரரே, இவை யும் நான் நன்கறிவேன். உதவி தேவைப்படும்போது கேட்கின்றேன்.

(சித்திராபுத்திரன் கைகூப்பி வணங்கி அமருகிறான்.)

இய: ஆசிரியனே, உனது கவிதை அருமை! அருமை! கவிதை போற்றலுக்குரியது. உன்னைப் பாராட்டுகிறேன்.

கவிதை சோபித்தமைக்குத் தமிழ் ஒரு முக்கிய காரணம், இல்லையா ஆசிரியனே?

இரா: ஆம் சுவாமி! தமிழ் இனிமையானது. ஆதலால், கவிதை நன்றாக அமைகிறது.

இய: நானும் இந்த விசாரணை மண்டபத்திலே பல்லா யிரக்கணக்கான மொழிகள் பேசக் கேட்டிருக்கிறேன். ஆனால், தமிழ் போல் இனிமையான இன்னொரு மொழி யைக் கேட்டதில்லை.

இரா: 'தமிழ்' என்ற சொல்லுக்கு 'இனிமை' என் பதே பொருள். இதனை மகாகவி பாரதியார், ''யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவ தெங்கும் காணோம்'' என்று அழகாகச் சொல்லியுள்ளார். பாரதி தாசனோ, ''தமிழுக்கு அமுதென்று பேர்'' என்று பெரு மிதத்துடன் கூறியுள்ளார்.

இய: பாரதிதாசனின் தமிழ் பற்றிய பாடல்கள் பாராட் டுக்குரியவை. எனது மதிப்பீட்டிற் சிறந்த தமிழ்ப் பாடல் கள் அவையே.

''கனியிடை ஏறிய சுளையும், - முற்றற்
கழையிடை ஏறிய சாறும்,
பனிமலர் ஏறிய தேனும், – காய்ச்சுப்
பாகிடை ஏறிய சுவையும்,

நனிபசு பொழியும் பாலும், – தென்னை
நல்கிய குளிரிளை நீரும்,
இனியன என்பேன் எனினும், – தமிழை
என்னுயிர் என்பேன் கண்டீர்''

இப்படியான பல பாடல்களை நானும் கேட்டு மகிழ்ந்துள்ளேன்.

அதுபோக, தமிழ் வல்லவனான நீ, தமிழ் நூல்கள் எடுத்தியம்பும் அரிய கருத்துக்களுக்கு மாறுக நடந்ததெப்படி? தமிழ்ப் பண்பாட்டைப் பேணவேண்டிய நீ, அதனை எப்படிக் குழிதோண்டிப் புதைத்தாய்? படிப்பது தேவாரம்; இடிப்பது சிவன்கோவிலா?

''ஒரு தமிழன் தமிழர்க்கே உயிர் வாழ்கின்றான்;
உயிர் வாழ்வோன் தமிழர்க்கே தனை ஈகின்றான்''

எனப் பரணி பாடி ஊரையே தட்டியெழுப்பிய நீ, நாவிலொன்றும் நடப்பிலொன்றுமாக ஈருவதாரியாகியது எப்படி?

இரா: சுவாமி, இது பொய்ப் பிரசாரம். நான் எதுவித தவறும் இழைக்காதவன்.

சித்: என்ன சொன்னாய்?

இரா: எனக்கு எதிராகச் சூழ்ச்சி நடந்து விட்டதென்று சொன்னேன்.

சித்: 'பொய்ப் பிரசாரம்' 'சூழ்ச்சி' என்ற சொற் பிரயோகங்களுக்கு உடனே மன்னிப்புக் கோரவேண்டும்.

இது நீதிதேவனின் விசாரணை மண்டபம். யார் நீதி தவறினும், இயமதர்மராசன் நீதி தவற மாட்டான். அவன் நீதியின் அதிபதி. அவன் முன் உயர் மரியாதையாக நடக்க வேண்டும். மரபுதவறிய வார்த்தைகளை உபயோகித்தமைக்கு மன்னிப்புக் கோரல் அவசியம்.

இரா: தேவா, நான் மன்னிப்புக் கோருகின்றேன் என்னை மன்னிப்பீராக! நான் சித்திராபுத்திரரைக் குறிப் பிட்டு அவ்வார்த்தைகளைப் பேசவில்லை. எனக்கு எதிரி களுண்டு. அவர்கள் எனக்கெதிராகப் பொய்ப்பிரசாரம் இங்கேயும் செய்திருக்கலாமென எண்ணியே அப்படிக் குறிப்பிட்டேன். என் குறிப்பீட்டால் சித்திரா புத்திர தேவரின் மனம் புண்பட்டுவிட்டதென்றால் - இந்த அறங் கூறுஅவை அவமதிக்கப்பட்டு விட்டதென்றால் வருத்தப் படுகிறேன். அதற்காகச் சிரம் தாழ்த்தி, கரங் கூப்பி மன்னிப்புக் கோருகிறேன்.

இய: சித்திராபுத்திரரே, அவனை நாம் மன்னிப்போம்.

ஆசிரியனே! ''வாழ்வும் வளமும் மங்காத தமிழ்'' என வும், ''வெங்குருதி தனிற்கமழ்ந்து வீரஞ்செய் கின்ற தமிழ் எங்கள் மூச்சாம்'' எனவும் ஆவேசமாய் வீர முழக்கஞ் செய்யும் நீ, எப்படித் தமிழ் மொழிக்குத் துரோ கம் செய்யத் துணிந்தாய்? 'செந்தமிழே', 'பைந்தமிழே', 'இன் தமிழே' எனப் பேசியதை மறந்து, எப்படிச் சொந்த நலனுக்காக மறைமுகமாக உழைத்தாய்?

இரா: அற்ப ஆசைகள் எனக்கில்லையே, சுவாமி!

சித்: சுத்தப் பொய், தேவரே!

இய: இல்லை, அவன் பற்றற்ற பெருந்துறவி; தனக் கென வாழாது பிறர்கேயென வாழ்ந்த உத்தமன்; ஊருக்கு உழைத்த பெருந்தொண்டன்!

(கோபமாக) மடையா, எம்மை ஏமாற்றலாமென எண்ணி விடாதே! தமிழ் விழா நடாத்த மக்களிடையே வசூலித்த பணத்தைச் சுருட்டிக் கட்டவில்லையா? சேர்ந்த பணத்திற் பெருவாரியைச் சொந்தத் தேவைக்கு எடுக்க வில்லையா? உன் நீசச் செயல்களால் நேர்மையாளரும் மக் களாற் சந்தேகிக்கப்படுகிறார்களே! தமிழின் பேரில் சங்கங் கள் நடாத்துகின்றுயல்லவா? தொடங்கிய காலந்

தொட்டு நீதான் தலைவனுக இருக்கத் தகுதியோ? வைக் கோற் பட்டடை நாயே! உன்னுல் நல்லவர்கள் செய லற்று இருக்கிறார்கள் - வல்லவர்கள் ஒதுங்கி யிருக்கி றார்கள்.

உன் சங்கத்தைத் தியாகத்தாற் கட்டியெழுப்பினுனே அமலன், அந்தத் தியாகி பெயருக்கு இருட்டடிப்புச் செய்த தேன்? களங்கம் கற்பித்ததேன்?

உனக்குத் 'தமிழ் வேள்' என்ற கௌரவப் பட்டம் சூட் டப்பட்டதல்லவா? அது எப்படிக் கிடைத்தது? நீயே கேட்டு, உன் கையாள்கள் வழங்கிய கௌரவமல்லவா?

இரா: என்னைப் பலமாகத் தாக்கி விட்டீர்கள் சுவாமி!

இய: இல்லை, உன்னைத் தூக்கிப் பேச வேண்டுமோ! நீ ஓர் ஆசிரியன், அல்லவா!

இரா: ஆம், சுவாமி!

இய: உனது தொழில் தெய்வீகமானது - புனிதமானது, இல்லையா?

இரா: ஆம், சுவாமி!

இய: புனிதத்தன்மையைக் காப்பாற்றினுயா?

இரா: மடுவை மலையாகக் கொள்ளுகிறீர்கள், சுவாமி!

இய: மடுவை மலையாக்கவில்லை, நான். நீ செய்து குவித்த பாவங்கள் மலையைவிடப் பெரியவை படிப்பிப்பதாகச் சொல்லிக்கொண்டு என்ன செய்திருக்கிறுய்? விவசாயம் செய்யவில்லையா? வியாபாரம் செய்யவில்லையா? பணத்தை அற வட்டிக்குக் கொடுக்கவில்லையா? வகுப்பில் மனம் ஒன்றிப் படிப்பித்ததுமுண்டா? வட்டிக் கணக்கும், சீட்டுக் கணக்கும் வகுப்பறையில் வகுப்பு நேரத்தில் அல்லவா பார்த்திருக்கிறுய்?

இரா: இவைகள் தவறுகள்; இவற்றைப் பாவங்களாக உருப் பெருப்பிக்கலாமா, சுவாமி?

இய: தன் நெஞ்சறியச் செய்யும் தவறுகள் பாவங்களே! உள்ளத்தால் பொய்யா தொழுக வேண்டும்.

''உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார் உள்ளத்து ளெல்லாம் உளன்''

என்றல்லவா வள்ளுவன் பேசுகின்றான்! திருக்குறளை மனப்பாடம் செய்த நீ எப்படிக் குறட் கருத்துக்கு மாறுக நடந்தாய்? ஆயிரம் ஆலயம் அமைப்பதிலும் ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவிப்பது சிறந்ததல்லவா? நீ என்ன செய்திருக்கிறாய்?

வறியவரின் பிள்ளைகளென்றால் பாகுபாடு காட்டவில்லையா? பணக்கார வீடுகளுக்குச் சென்று பணம் பெற்றுப் பாடம் சொல்லிக் கொடுக்கவில்லையா?

உன்னிடம் பாடம் படித்த மாணவிகளோடு முறை தவறி நடக்கவில்லையா? விவாகம் செய்வதாக வாக்குறுதி அளித்துவிட்டுத் திக்கற்ற பெண்களைக் கைவிடவில்லையா? ஏழைப் பெண்ணை மணம் முடிப்பதாக நம்பிக்கை அளித்துவிட்டு, பணக்கார வீட்டுப் பெண்ணைப் பணத்திற்காக வஞ்சித்து வாழ்க்கைப்படுத்தவில்லையா? உனது மனைவி முன்னாள் மாணவியல்லவா?

ஏன் பேச்சற்று நிற்கிறாய்? பேசு! பெரிய தமிழ்ப் பேச்சாளனையிற்றே, பேசு! திருவாயைத் திறந்து பேசு!

இரா: நான் தவறிழைத்தவன் என்பதை ஒத்துக்கொள்ளுகிறேன். என்னை மன்னித்தருளுங்கள், சுவாமி!

இய: புனிதமான ஆசிரியர் குலத்திற்கு அவமானத்தைத் தேடித் தந்த உனக்கு – தெய்வீகத் தொழிலை மாசுபடுத்திய உனக்கு மன்னிப்பே இல்லை!

இரா: தவறு செய்வது மனித இயல்பு; மன்னிப்பது தெய்வீகப் பண்பல்லவா, சுவாமி?

சித்: சுவாமி, இவன் இப்படித்தான் பூலோகத்திலே வாதிட்டு வாயடைக்கச் செய்து காரியங்களைச் சாதித்திருக்கிறான். அந்த வித்தையை இங்கேயும் காட்டப் பார்க்கிறான்.

இய: இவன் நெஞ்சினுக்கு மாறுக — மனச்சாட்சிக்கு மாறுக நடந்தமையால் தண்டனை இரட்டிப்பாகிறது.

இராமசாமி! உன்னை மன்னிக்கமாட்டேன். உனக்கு மன்னிப்பே இல்லை. போலிகளுக்கு மன்னிப்பே இல்லை. பெரய்யர்களுக்கு மன்னிப்பே இல்லை. உன்னைப் போன்றோருக்கென ஒதுக்கப்பட்ட நரகமொன்றுண்டு இனி நிற்காதே! போ! போய்விடு! போ!

(இயமதூதுவர் இருவர் வந்து ஆசிரியன் இராமசாமியை இழுத்துச் செல்லுகின்றனர். ஆசிரியன் வாடிய வதனத்துடன் போகின்றான்.

அதே நேரம் வியாபாரி இராசநாயகம் நுழைகிறான். அவன் புத்தம் புதிய வேட்டியும், நைலோன் சட்டையும் அணிந்திருக்கிறான். நெற்றி நிறையத் திருநீறு பூசிய வனுகவும், சந்தனப் பொட்டிட்டவனுகவும், காதினுள் பூ வைத்தவனுகவும் காணப்படுகிறான். தேவையே யில்லாமற் சிரிக்கிறான். கையில் மூன்று பொட்டலங்கள் வைத்திருக்கிறான்)

சித்: (எழுந்து) மகா பிரபு, இவன் பெயர் இராசநாயகம். இவனைப் பற்றியே நேற்று நான் குறிப்பிட்டிருந்தேன்.

இய: நினைவுறுத்தலுக்கு நன்றி சித்திராபுத்திரரே!

(சித்திராபுத்திரன் கை கூப்பி வணக்கம் செலுத்திவிட்டு அமருகிறான்.)

இராசநாயகம்; நானேதான் ஐயா, நான் தங்கூ வந்து காணவேணும், காணவேணுமென்று ஆவலாகவிருந்தனன். நண்பரிடம் வரும்போது சொல்லிக் கொண்டா வரவேணும்? அதுதான் ஐயா சொல்லாமல் பறையாமல் நானுக வந்திருக்கிறன்.

வரும்போது வாயிற் காவலன் மறித்து ஏதோ கேட்டவன். நான் போடா போ ஐயா எனக்கு மிக வேண்டியவர் என்றுபோட்டு என்ரைபாட்டுக்கு வந்தனன். இந்த வாயிற் காவலரின் வேலையே இதுதானய்யா. குருவை மிஞ்சிய சீஷர்களாக நடப்பாங்கள்.

இய: (நளின நடையில் விசாரணையை ஆரம்பிக்கிறன்) ஆம்...ஆம்... அதனல் ஒன்றுமில்லை. நண்பனைத்தேடி வந்தமைக்கு நன்றி. கையில் உதென்ன பொட்டலம்?

இராச: அது ஒரு சின்னச் சந்தோஷம். விறண்டிப் போத்தல், ஐயா.

இய: அடுத்தது...

இராச: நல்ல நாட்டுக் கோழிக்கறி. வடிவாக நெய்யில் பொரித்து பொலித்தீன் தாளிற் பார்சல் பண்ணி வந்திருக்கிறன், ஐயா.

இய: வேறுமேதோ இருப்பது போலத் தெரிகிறதே!

இராச: (அசட்டுச் சிரிப்புடன்,) அது வந்து....வந்து.... கொஞ்சக் கூசு, ஐயா. ஒரு இரண்டு லட்ச ரூபா!...ஐயாவுக்குத் தான்!

(மூன்று பொட்டலங்களையும் இயமதர்மராசனுக்குப் பக்கத்திலிருக்குமோர் ஆசனத்தின் மேல் வைக்கிறன்.)

இய: பரிசுகளுக்கு மிக்க நன்றி. இவற்றை நான் விரும்புவேனென எப்படித் தெரியும் உனக்கு?

இராச: உதென்னையா கதை! இதை விரும்பாதவர்களும் உலகத்திலே உண்டே, ஐயா? முற்றும் துறந்த முனிவர்களும் இதுகளெண்டால் ஆசைப்படுவினம். பணமென்றால் பிணமும் வாய் திறக்கும், ஐயா!

இய: அது சரி, ஒரு கதை. நான் உன்னைக் கண்டு கேட்போமென்று இருந்தனான். நீதானே முன்பு மெத்தக் கஷ்டப்பட்டனி. பிறகெப்படியப்பா பணக்காரனானாய்?

இராச: அதுகளும் ஒரு கதையே ஐயா. அதை விட்டுத் தள்ளுங்கள்.

இய: இல்லையப்பா; நண்பனின் சங்கதியை அறிவதில் என்ன குறை?

இராச: அதிலே ஒரு குறையுமில்லே, ஐயா.

இய: அப்ப சற்று விபரமாகச் சொல்லுகிறாயா?

இராச: சரி ஐயா, சொல்லத்தான் வேண்டுமென்றால் சொல்லுகிறேன். நான் ஐயா காலியிலே பலசரக்குக் கடையொன்றில் நின்றனான். முதலாளி அதிகமாகக் கடையிலே நிற்கமாட்டார். சாமான் கட்டவென்று நாட்டுக்குப் போவதுண்டு. போறவேளை கொள்வனவு செய்யும்போது கொஞ்சம் அடிச்சேன். பத்தாயிரத்திற்குக் கொள்வனவென்றால் பன்னிரண்டாயிரமெனக் கணக்குக் கொடுப்பேன். சாமான்களை லொறிகளில் அனுப்பும் போதும் ஒரு வேலை செய்தேன். ஒரு பில்லுக்கு இரண்டு முறை சாமான் அனுப்பினேன். இந்த வழியிலும் கொஞ்சம் சேர்ந்தது. முதலாளி பாருங்கோ கண்டி, மட்டக்களப்பு என்று பிற இடத்துக் கடைகளைப் பார்க்கப் போவதுண்டு. போனால் வர நாளெடுப்பார். நான் இரும்புப் பெட்டியிலேயும் கொஞ்சம் அடித்தேன்.

இய: இதை முதலாளி கண்டு பிடிக்கவில்லையா?

இராச: அவர் எப்படி ஐயா கண்டு பிடிப்பார்? அவருக்கு என்னிலை நல்ல நம்பிக்கை. இனி நான்தானே மனேஜரும். அப்படி ஏதேனென்றால் அப்பாவிப் பெடியங்களிற் பழியைப் போடுவதுதானே!

அந்த முதலாளி என்ன சுத்தமே ஐயா. அவரும் இரண்டு கணக்குப் புத்தகங்களைத்தானே வைத்திருந்தார். ஒன்று உண்மையான புத்தகம். மற்றது, வருமான வரிக் கந்தோர் தேவைக்கானது.

இய: அப்ப நீ செய்தது அவ்வளவு தவறில்லை.

இராச: தவறேயில்லை ஐயா. அவர் பொதுமக்களிட்டை அடித்தார். நான் அவரிட்டை அடித்தேன். அவர் பலரிட்டை அடித்தார். நான் ஒருவரிட்டை அடித்தேன்.

இய: அவர் எப்படியப்பா பொது மக்களிட்டை அடித்தார்?

இராச: அங்கே வாற சனம் வெறும் மோடய்யா. கணக்கு வழக்கே தெரியாது. இனிச் சாமான் வேண்டுவதும் கடனுக்குத்தான். நாங்கள் பக்கத்தைக் கூட்டும் போது ஒரு சைவரைக் கூட்டி விடுவதுதானே. அவை அதிகமாகக் காணமாட்டினம். தற்செயலாகக் கண்டுபிடித்தால் தவறுதான் என ஒத்துக் கொள்ளுகிறதுதானே.

இய: நீ அடிச்ச காசை என்ன செய்தாய்?

இராச: நாலுக கொழும்பிலை ஒரு கடை போட்டேன். கடைக்கு என்ன பெயர் தெரியுமே ஐயா?

இய; என்ன பெயர்?

இராச: பீப்பிள்ஸ் ரேடிங் சென்றர்.

இய: கலாதியான பெயர்.

இராச: என்ரை கடைப் பெடியளும் நல்ல உழைப்பாளிகளையா. காலமே ஐந்து மணியிலிருந்து இரவு பத்து

மணி மட்டும் மாடாக உழைப்பாங்கள் சும்மா சொல்லப்படாது, என்ரை கட்டளையும் அதுதானே!

இய: அப்ப தொழில் திணைக்களக் கரைச்சலில்லையா?

இராச: அவன்களைக் காசு கொடுத்து வாங்க எனக்குத் தெரியும். அவன்கள் என்ன ஐயா உங்களை எங்களைப் போலை கண்ணியமானவங்களா? மானம், மரியாதையை விற்பாங்களையா. கை நீட்டி வாங்குவாங்களையா. பொலிஸ், பிறைஸ் கொன்ரோல், இன்கம் ராச் எல்லாரும் கேட்டு வாங்குவாங்களையா. வாங்க மறுத்தவனெருவனை என்ரை வாழ்க்கையிலை இதுவரை காணவில்லை ஐயா. யாராவது கொஞ்சம் மறுத்தால், பெரிய நோட்டாக நீட்டினால் வாங்கிவிடுவாங்கள் ஐயா.

நாங்களும் கொஞ்சம் பிழை விட்டனாங்கள்தான் ஐயா. அந்தப் பாவங்களைக் கழுவ ஒரு பிராயச்சித்தம் செய்தேன்.

இய: நீ என்ன பிராயச்சித்தம் செய்தாய்?

இராச: அரசியல்.

(இயமதர்மராசன் சிரிக்கிறான்.)

இராச: அரசியலென்றால் ஏன் ஐயா சிரிக்கிறீங்கள்? எங்கடை ஊர் கிராம சபைக்கு நான்தானே தலைவர். என்னைச் சமாதான நீதவானாகவுமாக்கி இருக்கினம்.

இன்னெரு வேலையும் செய்தேன் ஐயா.

இய: என்னது?

இராச: கோயில்களை ஆதரித்தது. எனக்குத் தெய்வ நம்பிக்கை அதிகம் ஐயா. நான் மாதாமாதம் கதிர்காமம் போய் வந்தேன். இரண்டாண்டுக்கு ஒரு தடவை சிதம்பரத்திற்கும் போய் வந்தேன். செல்லச்சந்நதியில் அவிச்சுக் கொடுக்கிறனானய்யா. மாவிட்டபுரத்திலை திருவிழாச்

செய்கிறனுன். சிவராத்திரியன்று திருக்கேதீஸ்வரத்திலே தண்ணீர்ப் பந்தல் போடுகிறனுன். முனீஸ்வரத்திலே நான்தானே பெரிய மடம் கட்டுவித்தது. ஊர் முருகன் கோவிலுக்கு வசந்த மண்டபமும், தேரும், ஏன் இராஜ கோபுரமும் நான்தானே கட்டுவித்தேன். கோவில் முகாமைக்காரர் கோபுர முகப்பில் ''இந்த இராஜ கோபுரம் சைவ ஆசார, சிவநெறிச் செல்வர், உயர் திரு. இராசநாயகம் உபயம்'' என்றல்லவே மாபிளிலே பொறிப்பிச்சிருக்கிறார். ஏனையா தேர்த் திருவிழாவிலே சருகைப் பட்டும், தங்கச் சங்கிலியும் போட்டுக் கொண்டு தேரிலே இருப்பேன் ஐயா, காணவில்லையே?

இய: ஆமப்பா; உன்னைப் பற்றி இறைவனும் சொல்லியிருக்கிறார்.

இராச: (பல்லைக் காட்டிச் சிரித்தபடி) எனக்கது அப்பவே தெரியும் ஐயா. சிவபெருமானுக்கு என்னிலே பிடிப்பென்று. சிவபெருமான் என்ன ஐயா சொன்னவர்?..... என்ன ஐயா சொன்னவர்?

இய: ''நெஞ்சில் துறவார் துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணுர் இல்''

என்று சொன்னுர்.

இராச: ஒன்றும் விளங்கவில்லை. அப்படியென்றுல் என்ன ஐயா?

இய: விளக்கமாகச் சொன்னுல், உன்னை நன்றுகக் கவனிக்க வேண்டுமென்று கட்டளையிட்டார்.

இராச: (நீண்ட சுதூகலச் சிரிப்பு) ஆ... ஆ ஆ... ஆ பரம சந்தோஷமையா. பரம சந்தோஷமையா.

இய: சரியப்பா, எனக்கொரு வேலை செய்து தர முடியுமா?

இராச: சொல்லுங்கையா, உடனேயே நிறைவேற்றுகி றேன்.

இய: கொழும்பு முகத்துவாரத்திலே எனக்கொரு அழ கான கோவில் கட்டுவித்துத் தரவேணும். என்னையும் வழிபாட்டுத் தெய்வமாக்க வேணும்.

இராச: கட்டுவித்துத் தாறேன் ஐயா. நாலு பக்கக் கோபுரங்களுடன் நல்லதொரு கோவில் கட்டுவித்துத் தாறேன்.

இய: நான் கைம்மாறுக என்ன பரிசு தர வேண்டும்?

இராச: அப்படி ஒன்றும் வேண்டாம் ஐயா. அது எனது அன்புக் காணிக்கை.

இய: இல்லை, தராமல் விடுவது பண்பல்ல,

சித்: கைம்மாறு செய்வது தேவநீதியும் தேவா!

இராச: அப்பிடி என்ன ஐயா தர யோசனை?

இய: தகுந்த பரிசொன்று.

இராச: ஐயா தரத்தான் வேணுமென்றால், நான் எப் பிடி மறுப்பது?

இய: பரிசு தருகிறேன். நான் தரும் பரிசு ந.ர...க...ம்!

இராச: (அதிர்ச்சியாக) என்ன ஐயா!

இய: நரகம்!

இராச: அதென்ன ஐயா!

இய: பயங்கர நரகம்!

இராச: அப்ப ஐயாவுக்குக் கோவில்!

இய: (கோபமாக) அதை உனக்கே நரகத்தே கட்டு. பாவி! தெய்வங்களுக்கும் கைக்கூலி கொடுக்கப் பார்க்கி றாய்?

இராச: இது என்ன ஐயா அநியாயம்?

இய: அநியாயமல்ல... நியாயம்... தேவநீதி.

இராச: நான் அப்படி என்ன ஐயா செய்துவிட்டேன்?

இய: செய்யத் தகாதவை அனைத்தும் செய்துவிட்டாய். நீ போகப்போவது படுமோச, பயங்கர நரகம்!

(கடும் கோபமாக) உன்னைச் சும்மா விடமாட்டேன்..... அக்கினிச் சுவாலையுள் எரிந்துகொண்டிரு! அங்கம் அங்க மாக எரிந்து கருகிக்கொண்டிரு! நீ எரிய, எரிய கொதி யெண்ணெய் ஊற்றப்படும்!

இராச: என்னை நரகத்திற்கு அனுப்ப வேண்டாம் ஐயா. (அழுகிறான்).

இய: அழ ஆரம்பித்துவிட்டாயா?..... அழு! நன்றாக அழு! கண்களில் நீர் வற்றும் வரை அழு! உன் அழுகல் வேலைகளை நினைந்து நினைந்து அழு! நீ அழுது அழுது செத்துக்கொண்டிருக்க வேண்டும்!...

உன் சதைகள் அரியப்படும்! தோல் உரிக்கப்படும்! ஆணி கள் நெஞ்சில் அறையப்படும்! கண்களுக்குள் வெந்த வேல் பாய்ச்சப்படும்! நீ கழுவில் ஏற்றப்படுவாய்!

இராச: இப்பிடியெல்லாம் செய்யாதையுங்கோ ஐயா! (வெதும்பி அழுகிறான்.)

இய: அழுது பயனில்லை. வினை விதைத்து விட்டு, தினையை எதிர்பார்க்கமுடியாது. உனது வினைப்பயன் படியே அனைத்தும் நடக்கும்.....

இன்னும் சில கணப்பொழுதில் உன்னை யானையால் இட றுவிப்பேன்!

இராச: (சித்தக் கலக்கத்தால் பைத்தியம் பிடித்துப் பத்தன் போல் பாடி ஆடுகிறான்.)

"வேலா, முருகா, வெற்றி வேலாயுதா,
சரணம், சரணம், சரணம்!
வேல் முருகா, வெற்றி வேலாயுதா,
சரணம், சரணம், சரணம்!"

(பிதற்றுகின்றான்) முருகா, என்னை இந்த நரக வேதனையிலிருந்து காப்பாற்று! அழகான வெள்ளி மயில் வாகனம் செய்வித்துத் தாரேன்... யார் ராக்ஸ் ஒவ்வீசரா? கதிரையைப் போடு, கலரை அடி... வாங்க, வாங்க! என்ன வேண்டும்? வெள்ளைப் பூடா? எங்களிடமில்லை. வேறை ஓரிடத்திலுண்டு. நல்ல சாமான். விலைதான் கொஞ்சம் ஜஸ்தி. நாளைக்கு வாறியளா?..... யாரது? அவனுக்கு என்ன வேண்டுமாம். வேலையா? வியாபாரமே இல்லாத போது ஏதப்பா வேலை? எங்கேயப்பா வேலையிருக்கு?...

(இயமதர்ம ராசனும், சித்திராபுத்திரரும் சிரிக்கிறார்கள்.)

இராச: என்னடா சிரிக்கிறீர்கள்? என்னடா இது சிரிப்புக்கான இடமா? நிறுத்துங்கோடா சிரிப்பை... இவனேன் முணுமுணுக்கிறான்? (வேற்றுக் குரலில்) சம்பளம் போதாதையா. பிள்ளை குட்டிகளுக்கும் சுகமில்லை. மனிசியும் ஆஸ்பத்திரியிலை... (சொந்தக் குரலில்) ஆளைப்பாரடா, ஆளை! நெத்தலிப் பயில்வான்! பிள்ளைகளைப் பன்றியைப் போலப் பெறுவது. பிறகு காசு, காசு என்று கரைச்சற்படுத்துவது. காசில்லையப்பா.. .. (வேற்றுக் குரலில்) முதலாளி, நான் பதினைந்து வருடம் மாடா உழைத்தவன்... (சொந்தக் குரலில்) டேய், காகம் போல் கத்தாதே! கடையில் விருப்பமென்றால் நில்! விரும்பாவிட்டால் கணக்கை முடித்துக்கொண்டு போ! வேறு வேலையைப் பார்!

சித்: தேவா, அதிர்ச்சி இவனுக்குப் பைத்தியத்தை உண்டுபண்ணி விட்டது. சித்தப் பிரமையிற் கூட தனது பாவச் செயல்களையே பிதற்றுகிறான்!

இய: ஆம்! இவனுக்குப் பைத்தியம். இந்த நிலையில் தண்டனை வழங்கலாகாது. முதலில் பைத்தியத்திற்கு வைத்தியம் செய்விக்கிறேன்... யாரங்கே!

(இயமதூதுவர் இருவர் வருகிறார்கள்.)

இய: இவனை இழுத்துச் செல்லுங்கள். முதலில் பைத்தியத்திற்கு வைத்தியம் செய்வியுங்கள். பின்பு தண்டனையை ஆரம்பியுங்கள்.

(இராசநாயகம், ''ஆ! ஐயோ! என்னை விடு! என்னை விடு!'' எனக் கதறக் கதற இயமதூதுவர் இழுத்துச் செல்லுகின்றனர்.)

வாயி: மகா பிரபு! வேல்சாமி வருகிறார்.

சித்: அவருக்கு உயரிய மரியாதை கொடுத்து அழைத்து வரல் வேண்டும்.

இய: ஆம்! அவரை உயர் மரியாதையோடும், வணக்கத்துடனும் அழைத்து வா.

வாயி: அப்படியே, சுவாமி!

(வேல்சாமி வருகிறார். தூய வெள்ளை வேட்டியுடனும், தோளிற் சால்வையுடனும் எளிமையாகக் காணப்படுகிறார். அகத்தின் அழகை முகம் பிரதிபலிக்கிறது.)

இய: வருக, சிவபத்தனே வருக! தங்கள் வரவு நல்வரவாகுக!

(இயமதர்மராசனும், சித்திராபுத்திரரும் கை கூப்பி வணக்கம் செலுத்துகின்றனர். வேல்சாமி விழுந்து இயமதர்மராசனை வணங்க முற்பட, இயமதர்மராசன் தடுக்கிறான்.)

வேல்சாமி: (ஆச்சரியமாக) பிரபு, என்ன இது?

இய: தாங்கள் தங்களைத் தாழ்த்திக் கொள்ளாதீர்கள்.

சித்: சுவாமி, தாங்கள் எமது வணக்கத்துக்குரியவர். தாங்கள் இறைவனுடன் இரண்டறக் கலந்துவிடப் போகிறீர்கள். நாமோ அன்றும்-இன்றும்-என்றும் இறைவனின் அடிமைகள்!

வேல்: தேவா, என்னை நான் அனைவரினதும் அடிமையென்றே மதிக்கின்றேன். தாங்கள் இறைவனுக்கு அடிமைகளென்றால், நான் அடிமைகளின் அடிமை. அடியார்க்கு அடியார்!

சித்: இந்த மனப்பான்மையே, இறைவனின் கருத்தைக் கவர்ந்தது என்பது எனதெண்ணம். அன்பும், அடக்கமும் உடையோரை ஆண்டவன் நேசிக்கின்றான்.

இய: பத்தா, எனக்குச் சில சந்தேகங்கள் எழுகின்றன. தெளிவுக்காகக் கேட்கலாமா?

வேல்: கேளுங்கள் சாமி. ஏதோ என்னால் முடிந்தவரை பதில் சொல்ல முயல்கின்றேன்.

இய: நன்று! தாங்கள் பணமும், செல்வாக்கும் படைத்த குடும்பத்திற் பிறந்தவர். நிறையப் படித்தவர். வேலையைத் தேடாது, தந்தையின் செல்வத்திலே வசதியாக வாழ்ந்திருக்கலாம். இருந்தும், உழவுத் தொழிலை ஏன் மேற்கொண்டீர்கள்?

வேல்: உழவுத் தொழில் உத்தமமானது பாவம் குறைந்தது-சுதந்திரமானது-உடல், உள உறுதிக்கு உகந்தது-மகிழ்ச்சிகரமானது – நமது நாட்டு இன்றைய நிலையில், அத்தியாவசியமானது-வாய்ப்பு, வசதிமிக்கது-இலாபகரமானது-இவையே என்னை உழவுத் தொழிலை நாடவைத்தவை!

இய: தங்களுக்கு உந்து சக்தியாக அமைந்தது?

வேல்: தமிழ்க் கவிதைகள். உழவர் உலகத்தவர்க்கு ஆணிவேராய்ப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே உணர்ந்த

தமிழ்க் கவிஞர்கள் உழவுத் தொழிலை ஏற்றியும், போற்றியும், வற்புறுத்தியும் ஏராளமான கவிதைகள் புனைந்துள்ளனர். கவிதைகளில் ஈடுபாடுடைய நான் அவற்றுள் கவரப்பட்டேன். குறிப்பாக, திருவள்ளுவர் உழவைப்பற்றிச் சொன்ன பாணியே தனித்துவமானது. ஒரு குறளைக் கேளுங்கள்.

''உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்.''

திருவள்ளுவர் ஒரு தெய்வப்புலவர். அவரின் இன்னொரு குறளைக் கேளுங்கள்–இன்றைய காலகட்டத்திற்கு எத்தகைய பொருத்தம்!

''பலகுடை நீழலும் தங்குடைக்கீழ்க் காண்பர்
அலகுடை நீழ லவர்''

இய: உண்மையே பத்தா! வள்ளுவர் போல ஔவையாரும் உழவுத் தொழிலின் உயர்வைக் குறிப்பிட்டு அழகாகப் பாடியுள்ளார்.

''உழுதுண்டு வாழ்வதற்(கு) ஒப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறேர் பணிக்கு''

எனப் பகர்ந்துள்ளார். பாரதியார் எளிய நடையில், ''உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்'' என எழுச்சிகரமாக இயம்பியுள்ளார்.

வேல்: தமிழரும் உழவுத் தொழிலின் பெருமையைப் பறைசாற்றவே தைப்பொங்கற் பெருநாளை–உழவர் திருநாளாகக் கொண்டாடுகின்றனர். இந்த உயர்ந்த நோக்கத்தை அகிலம் வரவேற்று, அகிலம் முழுவதற்கும் பொதுப் பெருநாளாக்கி, ''அனைத்துலக உழவர் திருநாள்'' எனப் பெயரிட்டுக் கொண்டாடித் துதிக்க வேண்டுமென்பது எனது கருத்து.

இய: தங்கள் கருத்தை வரவேற்கின்றேன். ஆனால், உழவுத் தொழிலை இன்றைய சமுதாயமே உளமார மதிப்பதில்லையே!

வேல்: சமுதாயம் செல்வம் உள்ளவரைத்தான் போற்றுகிறது. செல்வமில்லாதவரைத் தூற்றுகிறது. இது சமூகச் சீர்கேடு!

இய: நன்று, பத்தா! இன்னொரு சந்தேகம். தங்களுடன் தங்களுடைய மனைவி மக்களும், சுற்றத்தவரும் ஒற்றுமையாக வாழ்ந்தார்கள். அது எப்படி?

வேல்: நான் எனக்கென வாழாது, பிறர்க்கென வாழ்ந்தமையால்

இய: தாங்கள் வசதியிருந்தும், ஆடம்பர வாழ்வை வெறுத்ததேன்?

வேல்: பலர் வறுமையில் உழல, சிலர் படாடோபத்திற்குப் பணத்தைக் கொட்டுவது பாவம்-சமூகத்துரோகம் என்பதும் எனது கருத்து.

இய: அழகாகச் சொன்னீர்கள். இதனை உலகம் அறிந்தும், அறியாததாக - தெரிந்தும், தெரியாததாக இருக்கிறதே! உலகம் என்றுதான் நல்வழியை நாடுமோ!

பத்தா, இறை வழிபாட்டைப் பற்றி என்ன கூறுகிறீர்கள்?

வேல்: மனமொன்றிய வழிபாடே பயனளிக்கும். பல மணி நேரம், மனஒடுக்கமின்றி ''இறைவா'' ''இறைவா'' எனப் பஜனை செய்வதிற் பயனில்லை. நான் அதிகாலையில் துயில் விட்டெழும்போது மாத்திரம் ''இறைவா'' என மனமொன்றி அவன் திருநாமத்தை உச்சரித்து வழிபட்டவன் தானே!

இய: புறத் தோற்றத்தைப் பற்றி உங்கள் அபிப்பிராயம்?

வேல்: ''மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்த(து) ஒழித்து விடின்''

புறத் தோற்றத்தை விட அகத் தோற்றமே அதிசிறந்தது. நாம் அக வளர்ச்சிக்காக அல்லும் பகலும் உழைத்தல் வேண்டும்.

இய: தாங்கள் இறைவனிடம் எதையும் வேண்டவில்லையே!

வேல்: இறைவன் அனைத்தையும் அறிபவன். நமக்கு எதைத் தரவேண்டும் என்பது அவனுக்குத் தெரியும்; ஆதலால், நாங்கள் அவனிடம் எதையும் கேட்க வேண்டிய அவசியமில்லை.

இய: தாங்கள் கண்ணெனப் போற்றியது...

வேல்: கடமையை!

இய: இத்தகைய அரிய கருத்துக்களைத் தங்களுக்கு ஊட்டியது எது?

வேல்: திருக்குறள். நான் திருவள்ளுவரை வழிகாட்டியாக ஏற்று வாழ்பவன்.

இய: திருவள்ளுவர் போதித்தவற்றுள் இன்றைய சமூகம் எதனைத் தாரக மந்திரமாகக் கொள்ளலாம்?

வேல்: திருவள்ளுவரே அதனைத் தீர்த்து வைத்திருக்கிறார்.

''பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாந் தலை''

இது இன்றைய சமூகத்திற்கல்ல - என்றைய சமூகத்திற்கும் – எக்காலத்திற்கும் ஏற்றது. இதன் வழி சமூகம் வாழ்ந்தால், தர்மம் தழைக்கும் என்பது எனது தாழ்மையான கருத்து.

இய: நன்று, சிவபத்தனே! நான் சந்தேகங்களைத் தெளிவு படுத்திய வகையில் ஒரு பிழையையும் இழைத்து விட்டேன். தாங்கள் இறைவனடி சேர்வதைத் தாமதிக்கச் செய்து விட்டேன். என்னை மன்னிக்க வேண்டும். இதோ! தங்களைச் சுவர்க்கத்திற்கு அனுப்பி வைக்கிறேன்.

யாரங்கே!..... இந்த உத்தமரை சுவர்க்கத்திற்கு அழைத்துச் செல்!

(இயமதூதுவர் இருவர் வருகிறார்கள். அவர்களைப் பின் தொடர்ந்து கரம் கூப்பி வணங்கிய வண்ணம் வேல்சாமி செல்கின்றார். இயமதர்மராசனும், சித்திராபுத்திரரும் எழுந்து மரியாதை செலுத்துகின்றனர்.

வேலுசாமி சுவர்க்கத்தில் வரவேற்கப்படுவதைக் குறிக்கு முகமாக மேளவாத்தியம் தூரத்தே ஒலிக்கிறது. அதனைத் தொடர்ந்து. அவர் இறைவனது திருமுன்னிலையை அண்மித்தலைக் காண்பிக்கும் வகையில் சிவபுராண பாராயண ஒலி மெல்ல எழுந்து, படிப்படியாக உயர்கிறது.

அனைவரும் பன்னிசை எழும் பக்கம் நோக்கிச் சிரம் தாழ்த்தி, கரம் கூப்பி வணங்குகின்றனர்.)

"ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறைநந் தேவன் அடிபோற்றி."

(பாராயண ஒலி படிப்படியாத் தணிந்து மறைகிறது.)

(திரை)

முற்றும்

வேல் வெளியீட்டகத்தின் அடுத்த வெளியீடு
அமுதன் எழுதிய சிறுகதைத் தொகுப்பு.
சமூகச் சீர்கேட்டை, ஒழுக்கக் கேட்டை
அப்பட்டமாக அம்பலப்படுத்தும் அழகு 'தமிழ் ஆக்கம்!'